


வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பெரியக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் குடியரசு தினவிழா மற்றும் பாரதியார் பிறந்தநாள் விழா முன்னிட்டு குறுவட்ட அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு நேற்று (06.11.2025) கேடயங்களை வழங்கி, பாராட்டு தெரிவித்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் உட்பட பலர் உள்ளனர்.

### கடலூர் மாவட்டம் - பெரிய குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில்

# ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்கள்!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் திறந்து வைத்தார்!

கடலூர், நவ.7-

வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் கடலூர் மாவட்டம், குறிஞ்சிப்பாடி வட்டம், பெரியக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் ரூ.2.79 கோடி மதிப்பீட்டில் கூடுதல் கட்டடங்களை நேற்று (06.11.2025) திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களின் பொருளாதாரம் மேம்படும் வகையில் பல்வேறு திட்டங்களை வகுத்து செயல்படுத்தி வருகிறார்கள். அரசின் திட்டங்கள் பயன்கள் நேரடியாக மக்களுக்கு சென்று சேர்வதை உறுதி செய்யும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள் கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் அளித்து பல்வேறு சிறப்புத் திட்டங்களை அறிவித்து அதனை அனைத்து மாணவர்களுக்கும் கொண்டுசேர்க்கும் வகையில் செயல்படுத்தி வருகிறார்கள். தமிழக மாணவர்களின் நலனை கருத்தில்கொண்டு பொருளாதார ஏற்றத்தாழ்வின்றி உயர்தரமான கல்வியினை பயில வேண்டும் என்பதற்காகவும், மாணாக்கர்கள் கல்வி கற்பதற்கான சிறந்த சூழ்நிலைகளை ஏற்படுத்தி தரவேண்டும் என்பதற்காக காலை உணவு திட்டம், புதுமைப்பெண் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை ஏற்படுத்தியுள்ளார்கள்.

முதலமைச்சர் அவர்கள் மாணவர்கள் உயர்தரமான கல்வியினை பாதுகாப்பான சூழலில் மனதிற்கினிய வகையிலும், அரசுப் பள்ளிகளில் மாணவர்களின் சேர்க்கையினை அதிகரிக்கும் நோக்கிலும் பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் கூடுதல் இடவசதிகளுடன் கல்வி கற்றிடும் பொருட்டு கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டப்பட்டு வருகிறது.

அந்த வகையில், பெரியக்குப்பம் அரசு உயர்நிலைப் பள்ளியில் 10 வகுப்பறை, 1 அறிவியல் ஆய்வகம் மற்றும் இரண்டு கழிப்பறை கட்டடம் என தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம்தளங்களுடன் சுமார் 703.50 ச.மீ பரப்பளவில் 500 மாணவர்கள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்டுள்ளது.

இவ்வாறு வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் செயற்பொறியாளர், பொதுப்பணித்துறை (கட்டடம்) சிவசங்கர நாயகி, மாவட்ட கல்வி அலுவலர் இஸ்மாயில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### பொதுக்கூட்டங்கள் – பரப்புரைகள் நடத்த

# வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கான கூட்டம்!

## அனைத்துக் கட்சிகள் பங்கேற்பு!

சென்னை, நவ.7-

தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கான அனைத்துக்கட்சிக் கூட்டம் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கரூரில் நடைபெற்ற அரசியல் பரப்புரை கூட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இது போன்ற சம்பவங்கள் மீண்டும் நிகழாமல் தடுப்பதற்கு, வழிகாட்டு நெறிமுறைகள் வகுக்க சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியது. இந்நிலையில், தமிழ்நாட்டில் பொதுக்கூட்டங்கள் மற்றும் பரப்புரைகள் நடத்த வழிகாட்டு நெறிமுறைகள் வகுப்பதற்கு, தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள கட்சிகளின் உறுப்பினர்களுடன், மூத்த அமைச்சர்கள் ஆலோசனை நடத்தினர்.

தலைமைச்செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில், அமைச்சர்கள் கே.என்.நேரு, ரகுபதி, மா.சுப்ரமணியன் ஆகியோர் தலைமையில் ஆலோசிக்கப்பட்டது. இக்கூட்டத்தில், திமுக சார்பில் ஆர்.எஸ்.பாரதி, என்.ஆர்.இளங்கோ, இந்திய தேசிய காங்கிரஸ் சார்பில் செல்வப்பெருந்தகை, ராஜேஷ்குமார், இந்திய கம்யூனிஸ்ட், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, மதிமுக, அதிமுக, பாஜக, மனித நேய மக்கள் கட்சி, கொங்கு நாடு மக்கள் தேசிய கட்சி, தமிழக வாழ்வுரிமை கட்சி, புரட்சி பாரதம், நாம் தமிழர் கட்சி உள்ளிட்ட 20 கட்சிகளின் பிரதிநிதிகள் பங்கேற்றனர். தலைமை செயலர் முருகானந்தம், உள்துறை செயலர் தீரஜ் குமார், பொறுப்பு டிஜிபி வெங்கடராமன், ஏடிஜிபி டேவிட்சன் ஆசிர்வாதம், சென்னை ஆணையர் அருண் உள்ளிட்ட முக்கிய அதிகாரிகள் உடனிருந்தனர்.

ரோடு ஷோ நிகழ்வுகள், பிரச்சாரக் கூட்டங்களுக்கு அனுமதி வழங்குவது தொடர்பாக எந்த கட்டுப்பாடு விதிக்கப்பட்டாலும், அடிப்படை உரிமைகள் மீறப்படாமல் இருக்க வேண்டும் என்று அனைத்துக்கட்சிக் கூட்டத்தில் திமுக சார்பில் வலியுறுத்தப்பட்டது.

# சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனை கூட்டம்!

## மாவட்ட செயலாளர் நே.சிற்றரசு அறிவிப்பு!



சென்னை மேற்கு மாவட்டக் கழக ஆலோசனை கூட்டம் **இன்று 7.11.2025 – வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில்** நுங்கம்பாக்கம், எண்.20/32, காம்தார் நகர் முதல் தெருவில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் **து.விக்டர்** தலைமையில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்தில் சென்னை மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட / மாநில நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் வட்டக் கழக செயலாளர்கள் என அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: வள்ளுவர் கோட்டத்தில் நடைபெறும் முற்போக்கு புத்தக கண்காட்சி – 2025 மற்றும் கழக இரு வண்ண கொடிக்கு 75 வயது

SIR நடவடிக்கையை கண்டித்து வரும் 11.11.2025 அன்று மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகள் சார்பில் நடைபெறும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்

**நே.சிற்றரசு**

செயலாளர், சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க.




அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் மற்றும் அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (06.11.2025) சென்னை, இராஜீவ்காந்தி அரசு பொது , HAND IN HAND INDIA 5 NORTHERN ARC CAPITAL சார்பில் ரூ.87.76 இலட்சம் மதிப்பீட்டில் 3 புதிய அவசர கால ஊர்திகள் 108 சேவையின் கீழ் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வந்தார்கள். இந்நிகழ்வில் மேயர் ஆர்.பிரியா, துணை மேயர் மு.மகேஷ்குமார். ப.செந்தில்குமார், மரு.சாந்தாராமன், தமிழ்நாடு சுகாதார திட்ட அலுவலர்கள், தன்னார்வ தொண்டு நிறுவன நிர்வாகிகள், மருத்துவப் பேராசிரியர்கள் மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# கடலூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி எழுச்சியுடன் கொண்டாடுவோம்!

## மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம்! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கடலூர், நவ.07-

கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், 06-11-2025, வியாழக் கிழமை, மாலை 6 மணியளவில், காட்டுமன்னார்கோயில், எம்.ஆர்.கே கலையரங்கத்தில் நடைப்பெற்றது.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், கடலூர் கிழக்கு மாவட்ட கழக செயலாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் கீழ்காணும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

நவம்பர் 27-ம் தேதி பிறந்த நாள் காணும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில், மாநகரம்,ஒன்றியம்,

நகரம்,பேரூர் மற்றும் கிளை கழகங்கள்தோறும் கழக கொடியேற்றியும், இனிப்புகள் வழங்கியும், நலத்திட்ட உதவிகள் வழங்கியும், பள்ளி மாணவர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கியும், விளையாட்டு போட்டிகள் நடத்தியும் சிறப்பாக கொண்டாட வேண்டும்.

வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை கண்டித்து, திமுக கூட்டணி கட்சிகள் சார்பில், கடலூர் மஞ்சக்குப்பம் தபால் நிலையம் அருகில் வருகின்ற 11-ம் தேதி ஆர்ப்பாட்டம் நடைப்பெற உள்ளது. இதில் கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தை சார்ந்த அனைத்து நிர்வாகிகளும் தவறாமல் கலந்துக் கொள்ள வேண்டும். கடலூர் கிழக்கு மாவட்ட கழகத்தில் நடைப்பெற்று வரும் வாக்காளர் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளை அனைத்து கழக நிர்வாகிகளும் தீவிர களப் பணியாற்றி சிறப்பாக செய்திட வேண்டும்.

வருகின்ற 8 மற்றும் 9-ம் தேதி சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைப் பெற உள்ள 75 வது அறிவுத் திருவிழாவில், கடலூர் கிழக்கு மாவட்ட கழகம் சார்பில் இளைஞரணி மாவட்ட,மாநகர, ஒன்றிய,நகர,பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பெருந்திரளாக கலந்துக்கொள்ள வேண்டும்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக பொருளாளர் எம்.ஆர்.கே.பி.கதிரவன், ஒன்றிய கழக செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் மேற்கு அ.முத்துசாமி, காட்டுமன்னார்கோவில் த.ஜெயபாண்டியன், குறிஞ்சிப்பாடி தெற்கு வி.சிவக்குமார், குறிஞ்சிப்பாடி வடக்கு ஆர்.நாராயணசாமி, ,திருமுட்டம் மேற்கு கே.ஆர்.கே.கோவிந்தராஜ், திருமுட்டம் வடக்கு எஸ்.செந்தில்குமார், கடலூர் கிழக்கு தெ.காசிராஜன், கடலூர் வடக்கு கே.ஆர்.தனஞ்செயன், கடலூர் தெற்கு ஆர்.விஜயசுந்தரம், புவனகிரி கிழக்கு ஏ.எஸ்.மதியழகன், புவனகிரி மேற்கு ஏ.எம்.மதியழகன், புவனகிரி மத்திய மு.வெற்றிவேலு , கீரப்பாளையம் கிழக்கு வி.ஜி.பி.சபாநாயகம், கீரப்பாளையம் மேற்கு டி.திருமூர்த்தி,கீரப்பாளையம் மத்திய வி.பி.பாலு, கம்மாபுரம் தெற்கு கே.ஆர்.ராயர், கம்மாபுரம் மத்திய பி.சுந்தரபாண்டியன், பரங்கிப்பேட்டை வடக்கு முத்துபெருமாள், பரங்கிப்பேட்டை தெற்கு ஆர்.கலையரசன், பரங்கிப்பேட்டை மத்திய எம்.மனோகரன், குமராட்சி மத்திய வி.ஆர்.ராஜேந்திரகுமார், குமராட்சி மேற்கு என்.கே.நடராஜன், குமராட்சி தெற்கு ம.சோழன், குமராட்சி வடக்கு வி.கோவிந்தசாமி,கடலூர் மத்திய கே.மகேஷ்,கடலூர் மாநகர செயலாளர்: கே.எஸ்.ராஜா, மாவட்ட தொகுதி பார்வையாளர்கள் ஆசிரியர் பி.வெங்கடாஜலபதி,ஆசிரியர் சின்னமணி, தருமர் பழனிசாமி, தமிழரசன், கடலூர் பகுதி செயலாளர்கள்: பா.வெங்கடேஷ், எஸ்.சலீம், மு.இளையராஜா, வடலூர் நகர கழக செயலாளர்கள் த.தமிழ்ச்செல்வன், வடலூர் நகரமன்றத் தலைவர் எஸ்.சிவக்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள்: வ.ஞானசேகரன், கிள்ளை எஸ்.ரவிச்சந்திரன்,வே.விக்கிரமன், பொதுக்குழு உறுப்பினர்கள்: கே.பி.ஆர்.பாலமுருகன், த.ஜேம்ஸ்.விஜயராகவன், இரா.தமிழரசன் ச.கல்யாணசுந்தரம், பேரூர் செயலாளர்கள்: காட்டுமன்னார்கோவில் எஸ்.கணேசமூர்த்தி, குறிஞ்சிப்பாடி கு.வே.ப. ஜெய்சங்கர், அண்ணாமலை நகர் க.பழனி, சேத்திய தோப்பு ப.மனோகரன், லால்பேட்டை ஜெ.எம்.அன்வர்சதாத், பரங்கிப் பேட்டை தேன்மொழி சங்கர், மாவட்ட கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள்: இளைஞர் அணி ஜி.கார்த்திகேயன், மாணவரணி அமைப்பாளர் அப்பு ஆர்.சந்தியநாராயணன், விவசாய அணி பொன்.பன்னீர்செல்வம், வழக்கறிஞர் அணி பி.அருள்ஜோதி, தகவல் தொழில்நுட்ப அணி துணை அமைப்பாளர்கள் அ.முத்தமிழ்செல்வன், வி.எம்.வெற்றிசெல்வன், ப.பிரவின்குமார்,சண்முகம், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் தமிழ் உள்ளிட்ட மாவட்ட, மாநகர,கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் கலந்துக் கொண்டனர்.

# மேடவாக்கம் ப. ரவி உருவப்படத்தை திறந்து வைத்து நல உதவிகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வழங்கினார்!

## அமைச்சர் மா. சுப்பிரமணியன் தலைமை!

சென்னை, நவ. 7 -

சென்னை தெற்கு மாவட்டம் புனித தோமையார் மலை ஒன்றியம் கழக தலைமை பொதுக் குழு உறுப்பினர் ஒன்றிய கவுன்சிலர் ஒருங்கிணைந்த தாமஸ் மலை ஒன்றிய கழக முன்னாள் செயலாளர் 2001 முதல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் மேடவாக்கம் ஊராட்சி மன்ற தலைவராக மேடவாக்கம் ஊராட்சியை தலைமையேற்று வழிநடத்திய மறைந்த மேடவாக்கம் ப.ரவி அவர்களின் திருவுருவப்பட திறப்பு நிகழ்ச்சி மற்றும் 3000 நபர்களுக்கு நல திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்வு நவம்பர் 4ம் செவ்வாய்க்கிழமை மாலை 5 மணி அளவில் மேடவாக்கத்தில் நடைபெற்றது.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளர் மா சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் துணை முதலமைச்சர் - கழக இளைஞரணி மாநில செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மறைந்த மேடவாக்கம் ரவி அவர்களின் திருஉருவ படத்தினை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தி 3000 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்வில் அரக்கோணம் எம்.பி. ஜெகத்ரட்சகன். சட்டமன்ற உறுப்பினர் எஸ். அரவிந்த் ரமேஷ். துணை மேயர் காமராஜ். ஒன்றிய சேர்மன் சங்கீதா பாரதி ராஜன். ஒன்றிய செயலாளர் வெங்கடேசன். முன்னிலை வகித்தனர்

மேலும் சட்டமன்ற உறுப்பினர்கள் காரம்பாக்கம் கணபதி. ஏ.வி.எம். பிரபாகராஜா. சென்னை மாநகராட்சி சேர்மன்கள் பெருங்குடி ரவிச்சந்திரன். இ. மதி அழகன். தா. விஸ்வநாதன். இரா. துரைராஜ். நொளம்பூர் ராஜன். தலைமைக்காக நிர்வாகிகள் கா. சோமு. காசி முத்துமாணிக்கம். ரத்னா லோகேஸ்வரன். மாவட்ட நிர்வாகிகள் குணசேகரன். பாலவாக்கம் மு. மனோகரன். பாஸ்கரன். ஆ. ஹரி கிருஷ்ணன். வே. ஆனந்தன். வீரமணி. ஜே. இ. பாண்டியன் கா.வீ. தியாக ராஜன்.

ஒன்றிய கழக அவைத் தலைவர்சித்தாலப்பாக்கம் எஸ். ரவி. எச்.டி.போஸ். தா. டில்லிபாபு. சமாதானம் நலமுத்து. கே. குமார். ஆர். சொக்கலிங்கம். ஜி. எம். ஏழுமலை.டி.எஸ். பாரதிராஜன். இளைஞரணி அமைப்பாளர் ஓ.கே. எஸ். சதீஷ். மாணவரணி எஸ். கிஷோர். உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள். வேங்கைவாசல் தலைவர் ஜெயச்சந்திரன். கோவிலம்பாக்கம் டாக்டர் ரங்கநாதன். துணைத் தலைவர்கள். எஸ். கோபு. கார்த்திகேயன். டி.என். அன்புமணி. லோகிதாஸ். ஒன்றிய கவுன்சிலர்கள் கல்பனா சுரேஷ். மோகனப்பிரியா சரவணன். பன்னீர் செல்வம். மேடவாக்கம் வார்டு உறுப்பினர்கள். கழக நிர்வாகிகள் ஜே. கமலக்கண்ணன். ஈபி. நடராஜன். ரவி கேசவன். கோவிந்தராஜுலு. கௌரி முருகன். எஸ். சுரேஷ். ஆர். வினோத். டிசேட்டு. என். மூர்த்தி. டி. பிராங்க்ளின்.

ஒன்றிய அணிகளின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் என். சரவணன். புவனேஷ். ஜி. லோகேஷ். கே. சாமிநாதன். விஷால் சந்திரசேகர். பிரபுதாஸ். நன்மங்கலம் பாலாஜி. உத்தம ராஜன். இம்மானுவேல். மேடவாக்கம் இளைஞர் அணியினர் கே. ராஜேஷ். என். பாஸ்கர். ஆர். ரமேஷ். எம். பி. ரமேஷ். மற்றும் கழக உடன்பிறப்புகள் 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

நிறைவாக ஆசியா பெண்கள் இளையோர் கபடி போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் வென்ற இந்திய அணியின் துணை கேப்டன் கண்ணகி நகர் கார்த்திகாவிற்கு

ஆர்.எஸ்.லோகேஷ் வரா.குடும்பத்தின் சார்பில், இரண்டு சக்கர வாகனம் டிவிஎஸ். ஜூபிடர். வண்டியை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன். அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன் வழங்கினார்கள்.




இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி தொடர் முயற்சியால், இராயபுரம் மின்ட் மார்டன் சிட்டி மற்றும் பிஷப் லைன் பகுதிகளில் அடிக்கடி ஏற்படும் மின்வெட்டு பிரச்சனையையும், குறைந்த அழுத்த மின்சார பிரச்சனையையும் சரிசெய்ய, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பில் சீரமைக்கப்பட்ட புதிய மின்மாற்றிகளை, இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா.மூர்த்தி திறந்து வைத்தார். நிகழ்வில் இராயபுரம் மேற்கு பகுதி செயலாளர் வ.பெ.சுரேஷ், இராயபுரம் கிழக்கு பகுதி செயலாளர் இரா. செந்தில் குமார், வட்ட செயலாளர்கள் பால லட்சுமணன், கண்ணன் மற்றும் மாவட்ட, பகுதி, வட்ட, கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.